INTERNATIONAL BACCALAUREATE
BACCALAURÉAT INTERNATIONAL
BACHILLERATO INTERNACIONAL



**TAMIL A1 – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL A1 – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMUL A1 – NIVEL MEDIO – PRUEBA 1**

Monday 8 May 2000 (morning)
Lundi 8 mai 2000 (matin)
Lunes 8 de mayo del 2000 (mañana)

3 hours / 3 heures / 3 horas

---

INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this examination paper until instructed to do so.
- Section A: Write a commentary on one passage. Include in your commentary answers to all the questions set.
- Section B: Answer one essay question. Refer mainly to works studied in Part 3 (Groups of Works); references to other works are permissible but must not form the main body of your answer.

INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- Ne pas ouvrir cette épreuve avant d'y être autorisé.
- Section A : Écrire un commentaire sur un passage. Votre commentaire doit traiter toutes les questions posées.
- Section B : Traiter un sujet de composition. Se référer principalement aux œuvres étudiées dans la troisième partie (Groupes d'œuvres) ; les références à d'autres œuvres sont permises mais ne doivent pas constituer l'essentiel de la réponse.

INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra esta prueba hasta que se lo autoricen.
- Sección A: Escriba un comentario sobre uno de los fragmentos. Debe incluir en su comentario respuestas a todas las preguntas de orientación.
- Sección B: Elija un tema de redacción. Su respuesta debe centrarse principalmente en las obras estudiadas para la Parte 3 (Grupos de obras); se permiten referencias a otras obras siempre que no formen la parte principal de la respuesta.

## பகுதி 1

கீழே கொடுக்கப்பட்டுள்ள(அ அல்லது ஆ) பகுதியில் ஏதாவது ஒன்றிற்கு விடை எழுதவும்

அ.

ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை மியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தகுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

ஔவையார் – புறநானூறு

- இந்தப் பாட்டு எதைப் பற்றி கூறுகிறது?
- ஔவையார் இந்தப் பாட்டில் கூறுவதிலிருந்து அதியமானைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?
- இந்தப் பாட்டு கருத்தை எவ்வாறு எடுத்துக் கூறுகிறது?
- இந்தப் பாட்டு எழுதப்பட்ட விதத்தைப் பற்றி விளக்கி எழுதுக.

ஆ. கீழ் வரும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதவும்.

பொழுது செவ்வனே புலர்ந்தது. புகைவண்டி மெல்லப் போகாதா, ஊர்ந்து செல்லாத, தவழாதா என்றுங் கருதினோம். யானொரு பாங்கர் அமர்ந்து தலை சாய்த்துக் கண்களை நாலாப் பக்கமும் சுழற்றி இயற்கைத் தேவியை உற்று நோக்கிச் சென்றேன். இலங்கையின் வனப்பு என்னே! என்னே!! என்று மகிழ்ந்தேன். இலங்கை நம் தென்னாட்டோடு தொடர்பு கொண்டிருந்த ஞான்று, பழந்தமிழ்ப் புலவர்கள் உறைந்த இடம் இதுவாயிருக்குமோ? என்று எழுந்த நினைவு என்னை விட்டகலவில்லை.

வானத்தின் கருமையும், நாலாப் பக்கமும் பசுமையுமிழும் மலைகளின் செறிவும் சூழலும், நிரையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகில் குழாங்கள் கொண்டல் கொண்டலாக அசைந்தும், ஆடியும், ஓடியும், மலைமுகடுகளில் சூழ்ந்து தவழ்ந்து புகை போல் பொலியும் காட்சியும், அம்மலைகளின் உடல் புலனாகாதவாறு பசும் பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் புதைந்துள்ள அழகும் புலன்களை ஒன்றச் செய்கின்றன.

மலை உச்சியினின்றும் தரைவரை நிரை நிரையாகச் சரிந்தும், செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கைவிட்டுப் பிரியாத அணித்தே புடை சூழ்ந்து நிற்கும் கமுகின் உயர்வும், அவற்றைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக் கிடக்கும் கண்பரந்த செடி கொடிகளின் ஈட்டமும் வானுலகேறப் பச்சைப் படாம் விரித்த படிகளெனத் திகழ்கின்றனவோ என ஐயுறலாம். புகைவண்டி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன்றிற்று. பசுமைக்காட்சி இல்லாத இடமும் உண்டோ? கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென்றுரைப்பேன்!!

எனது இலங்கைச் செலவு – திரு.வி.க.

- இலங்கைச் செலவு என்ற இக்கட்டுரையின் நோக்கம் பற்றி எழுதுக.
- இயற்கையை எவ்வாறு விளக்கியிருக்கிறார் என்பதை எழுதவும்
- இயற்கையை விளக்கியிருப்பதில் ஆசிரியரின் எண்ணம் என்ன என்பதையும்

  எப்படி நமக்கு அது தெரிகிறது என்பது பற்றியும் விளக்குக.
- உன் மனதில் என்ன எண்ணம் ஏற்படுகிறது, ஏன்

## பகுதி – 2

ஏதாவது ஒன்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. மூன்றாவது பிரிவில் நீ படித்த இரண்டு புத்தகங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு கட்டுரை எழுதவும்

2. நீ படித்த புத்தகங்களில் இறந்த காலத்தைப் பற்றி அந்தக் கதை எப்படி காண்பிக்கிறது அல்லது எதிர்காலத்தைப் பற்றிய கனாவை எப்படிக் காண்பிக்கிறது என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

3. நீ படித்த புத்தகங்களிலிருந்து வில்லனாக வரும் பாத்திரங்களை ஒப்பிட்டு எழுது. வில்லன்கள் கதைகள் வளருவதற்கு எவ்வளவு அவசியம் என்பதையும் ஆசிரியரின் எண்ணத்தைப் பற்றியும் அதில் கூறுக.

4. நீ படித்த புத்தகங்களிலிருந்து மாறுபட்ட அபிப்பிராயம் உள்ள பாத்திரங்களைப் பற்றி விளக்கி ஒரு கட்டுரை எழுது.

5. சில எழுத்தாளர்கள் தங்களை ஆசிரியர்கள் என்றும் தங்கள் எழுத்துக்களைப் பாடங்கள் என்றும் நினைக்கின்றனர். நீ படித்த புத்தகங்களில் எவை பாடங்கள் மாதிரி இருக்கின்றன என்பது பற்றி விளக்குக.

6. நீ படித்த இரண்டு புத்தகங்களிலிருந்து எப்படி காட்சிகளும் சூழ்நிலைகளும் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுது.

---